முழுப்பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

51 T I,II

மாகாணக் கல்வித் திணைக்களம், வடமாகாணம்
**Provincial Department of Education, Northern Province**

நிலையறிபரீட்சை-2021
**General Certificate of Education (Ord. Level)**

| | |
|---|---|
| நாடகமும் அரங்கியலும் I, II<br>**Drama & Theatre I, II** | மூன்று மணித்தியாலம்<br>**Three Hours** |

**அறிவுறுத்தல்கள்**

*எல்லா வினாக்களுக்கும் இவ்வினாத்தாளிலேயே விடை எழுதுக

*இப்பகுதியில் 1 தொடக்கம் 40 வரையான வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் சரியானதும் பொருத்தமானதுமான விடையைத் தெரிவுசெய்க.

## பகுதி 1

1. காண்பிய வழிச் சித்தரிப்பு என்பது
   1. சொற்களால் அல்லது குரலால் சித்தரிக்கப்படுவது ஆகும்.
   2. உடல் உறுப்புக்களால் சித்தரிக்கப்படுவது ஆகும்.
   3. முகபாவங்களால் உணர்வுகளை வெளிப்படுத்துவது ஆகும்.
   4. வேட உடை ஒப்பனை மற்றும் அரங்கப் பொருட்களால் சித்தரிக்கப்படுவதாகும்.

2. யதார்த்த மோடி நாடகத்தில் காணப்படும் பிரதான இயல்புகளில் ஒன்று
   1. சொல்லாடல்கள் சந்தம் தாளம் ஆகியவற்றுக்கு ஏற்றதாகக் காணப்படும்
   2. மேடைப்பின்னணி குறியீடாகக் காணப்படும்
   3. வேட உடைகள் மிகைப்படுத்திக் காணப்படும்
   4. காட்சியமைப்பு ஒப்பனை இயல்பானதாகக் காணப்படும்

3. ஊமம் தொடர்பான பயிற்சிக்கு அழுத்தம் கொடுக்கும் அரங்க விளையாட்டுகளில் ஒன்று.
   1. ஆடும் வீடும்
   2. குருட்டு ஆட்டோ
   3. வெயிற் படுதல்
   4. பழக் கலவை

4. நாடகம் ஒன்று நிகழ்த்த மிக அவசியமானது.
   1. நடிகர்
   2. மேடை
   3. காட்சி
   4. இசை

5. குழந்தை ம.சண்முகலிங்கம் எழுதி நெறியாள்கை செய்த "ஆர் கொலோ சதுரர்"ஒரு
   1. இசை நாடகம்
   2. நாட்டிய நாடகம்
   3. பாடசாலை நாடகம்
   4. சிறுவர் நாடகம்

6. ஈழத்தில் இயல்பான பேச்சு மொழியைக் கையாண்டு இயற்பண்பு வாத முறையில் நாடகங்களை எழுதியவர்.
   1. சு.வித்தியானந்தன்
   2. க.கணபதிப்பிள்ளை
   3. கலையரசு சொர்ணலிங்கம்
   4. மகாகவி உருத்திரமூர்த்தி

7. கா.சிவத்தம்பி அவர்கள் எழுதிய அரங்க ஆய்வு நூல்களில் ஒன்று
   1. பண்டைத் தமிழ்ச் சமூகத்தில் நாடகம்
   2. ஈழத்து இசை நாடக வரலாறு
   3. அரங்கு ஓர் அறிமுகம்
   4. வட இலங்கை நாட்டார் அரங்கு



kalvi.lk

8. கூத்து என்றவுடன் எம்மனதில் வருவது
1. பாட்டு
2. இசை
3. ஆட்டம்
4. மேடை

9. எழுத்துரு ஒன்றினை உருவாக்கும் போது கவனிக்க வேண்டிய சரியான ஒழுங்கு முறை
1. கதை, சூழமைவுகள், சம்பவங்களின் ஒருமைப்பாடு தர்க ரீதியான தொடர்பு
2. கதை சம்பவங்களின் ஒருமைப்பாடு சூழமைவுகள் தர்க்க ரீதியான தொடர்பு
3. கதை தர்க்க ரீதியான தொடர்பு சூழமைவுகள் சம்பவங்களின் ஒருமைப்பாடு
4. கதை சூழமைவுகள் தர்க்க ரீதியான தொடர்பு சம்பவங்களின் ஒருமைப்பாடு

10. கூத்துருவ வடிவத்தில் சமகாலத்துக்குரிய கதைப்பொருளைப் புகுத்தி புதிய கூத்துரவ .நாடகங்களாக வெளிவந்த நாடகங்களில் ஒன்று
1. உறவுகள்
2. சங்காரம்
3. அபசுரம்
4. தியாகத் திருமணம்

11. ஒரு நாடகத்திற்கான காட்சி அலங்காரம் என்பது
1. எப்போதும் நடப்பியல்பை ஒத்ததாக இருக்க வேண்டும்
2. பகட்டாகவும் ஆடம்பரமாகவும் இருக்க வேண்டும்.
3. எப்போதும் பின்னாலே இருத்தல் வேண்டும்
4. நாடக அளிக்கையின் பிரதான மோடியை நிலை நிறுத்தல்வேண்டும்.

12.“பொறுத்தது போதும்” புதியதொரு வீடு போன்ற நாடகங்களைமுதலில் நெறியாள்கை செய்தவர்
1.இளைய பத்மநாதன்
2. சுஹைர் ஹமிட்
3. அ.தாசீசியஸ்
4. நா.சுந்தரலிங்கம்

13.“அங்க அசைவுகளாலும் சொற்களாலும் வெளியிடப்படும் கருத்துக்களை முகத்தின் உணர்வு மூலம் எடுத்துக் காட்டலாம்” இக்கூற்றில் இடம்பெறும் சித்தரிப்புக்கள் முறையே
1.குரல் வழி உணர்ச்சிவழி காண்பியவழி என்பனவாகும்
2. உடல்வழி குரல் வழி உணர்ச்சி வழி என்பனவாகும்
3. உணர்ச்சிவழி காண்பியவழி உடல் வழி என்பனவாகும்
4. உடல்வழி குரல் வழி காண்பிய வழி என்பனவாகும்

14. அரங்கில் செவிப்புல ரீதியான தாக்கத்தை பார்ப்போருக்கு ஏற்படுத்தும் துணைக்கலை
1. காட்சி விதானிப்பு ஆகும்
2. இசை விதானிப்பு ஆகும்
3. அரங்க ஒளியுட்டுகை ஆகும்
4. வேடஉடை ஒப்பனை ஆகும்

15. அரங்கம் என்ற சஞ்சிகையை வெளியிட்ட நிறுவனம்
1. கொழும்பு கூத்தாடிகள் குழு
2. மட்டக்களப்பு நாடக சபா
3. நெல்லியடி அம்பலத்தாடிகள் குழு
4. நாடக அரங்கக் கல்லூரி

16. நடிகர் எப்போதும்
1. சித்தரிப்பு ஆற்றல் உடையவரக இருத்தல் வேண்டும்
2. அழகானவரக இருத்தல் வேண்டும்
3. நல்ல தடித்த குரல் உடையவராக இருத்தல் வேண்டும்
4. விலை உயர்ந்த கவர்ச்சியான வேடஉடைஅணிந்திருத்தல் வேண்டும்



kalvi.lk

17. நாடக எழுத்துருவை ஆற்றுகையாக படைப்பாக்கம் செய்பவர்
1. தயாரிப்பாளர்
2.நெறியாளர்
3. மேடை முகாமையளர்
4. பார்ப்போர்

18.“தனம் தனம் தன தானா அண்டம் உலாவிய மாவில்” எனவரும் முயிற்று வசந்தன் பாடல்
1. மட்டக்களப்பிற்குரியது
2. யாழ்ப்பாணத்திற்குரியது
3. முல்லைத்திவிற்குரியது
4. மன்னாரிற்குரியது

19. கூத்து நிகழ்த்துவதற்கான ‘களரி’ அரங்கில் பார்ப்போர்
1. இரண்டுபக்கமும் இருப்பர்
2. ஒரு பக்கம் இருப்பர்
3. சுற்றிவர இருப்பர்
4. மூன்று பக்கமும் இருப்பர்

20. நாடகத்தின் துணைக்கலைகளில் ஒன்றாகிய மேடைப் பொருட்கள் பயன்படுத்துவதின் நோக்கங்களில் ஒன்று அல்லாதது.
1.பாத்திரங்களில் சமூக அந்தஸ்தை புலப்படுத்துவதாகஅமைதல்
2. இலகுவாக நகர்த்தக் கூடியதாக அமைதல்
3. அரங்க வெளியில் அழகியல் தோற்றத்தை ஏற்படுத்துவதாகஅமைதல்
4.உயர் சமூக அந்தஸ்த்தை வெளிப்படுத்துவதாய் அமைதல்

21.நிலைக் கண்ணாடி தையல் இயந்திரம் சாய்மனைக் கதிரைபோன்ற பொருட்களை ஆரொடு நோகேன் நாடகத்திற்காகபயன்படுத்தும் காட்சியாக அமைவது
1.சங்கரி தாய் தந்தை தோன்றும் முதலாம் காட்சி
2.சீலா ரஜீவ் தாய் தந்தை தோன்றும் இரண்டாம் காட்சி
3.அம்பிகை ஆரணி தாய் தந்தை தோன்றும் மூன்றாம் காட்சி
4.மூன்று குடும்பங்களும் இணையும் திருமணக்காட்சி

22. ஆரொடு நோகேன் நாடகத்தில் ஆடு கதிரைபயன்படுத்தக் கூடிய குடும்பம்
1. முதலாவது குடும்பம்
2. இரண்டாவது குடும்பம்
3. மூன்றாவது குடும்பம்
4. மூன்று குடும்பங்களும்

23.“பொல்லா நல்லோர் கனவு கண்டேன்….” ஏன்னும் பாடல்இடம்பெறும் கூத்து நாடகம்
1. காத்தவராயன் கூத்து
2. காமன் கூத்து
3. வட மோடிக் கூத்து
4. தென் மோடிக் கூத்து

24. இசை நாடகத்தினால் அறிமுகம் செய்யப்பட்ட விடயங்கள்அடங்காத தொகுதி
1. படச்சட்ட மேடை மற்றும் கொட்டகை அமைத்தல்
2. வாயு விளக்குகள் மற்றும் வர்ணம் தீட்டப்பட்ட காட்சித்திரைகள்
3. ஆடுதலும் ஆட்டக்கோலங்களும் என்ற நடிப்பு முறை
4. பாடுதலும் நடித்தலும் என்ற செழுமையான நடிப்பு முறை

25.“மன்னார் மாந்தோட்ட நாடகங்கள்” என்னும் அரங்க ஆய்வுநூலை வெளியிட்டவர்
1. அருட்திரு செ.அன்புராஜா அடிகள்
2. பேரசிரியர் அருட்திரு மரியசேவியர் அடிகள்
3. பேராசிரியர் அருட்திரு பிலேடுரன் அடிகள்
4. அருட்திரு டேமியன் அடிகள்



kalvi.lk

26"புதியதொரு வீடு" நாடகத்திலிருந்து வரும் உரையாடல்களை அவதானித்து விடையளிக்குக.

A. வீட்டிலே நிற்கவிடாமல் ஒரே அலுவல்!

B. வீட்டு நினைவும் சிறிதளவு வேண்டாமே? மாட்டன் என்னாமல் மறுமொழி ஒன்று சொல்லு ஊர் வாயை மூட உலை மூடி ஒன்றுண்டு!

C. கண்ணாத்தை வாய்க்கும் கதவு கிடைக்குமே?

இவ்வுரையாடலில் பங்கேற்கும் பாத்திரங்கள் A,B என்பன முறையே

1. மன்னவன் மாயன்
2. மாசிலன் கண்ணாத்தை
3. மயிலி மறைக்காடர்
4. கண்ணாத்தை மயிலி

27. பாத்திரமொன்றின் நடத்தைகள் உணர்சிகள் என்பன

1. பௌதீகப் பண்புகள்
2. உளவியற் பண்புகள்
3. சமூக குணாம்சங்கள்
4.இயல்பிசைக் குணாம்சங்கள்

28. மலையகத்தில் ஆடப்படும் கூத்து அல்லாதது

1. அர்ச்சுனன் தபசு
2. பொன்னர் சங்கர்
3. வீரபத்திரர் ஆட்டம்
4. கோவலன் கூத்து

29. பின்வருவோரில் நாடக ஆசிரியர் அல்லாதவர்

1 .நா.சுந்தரலிங்கம்
2. இ.முருகையன்
3. பிரான்சிஸ் ஜெனம்
4. சி.மௌனகுரு

30. இசைவிதானிப்பில் உருக்கமான சோகக் காட்கியை மெருகூட்டடிக் காட்டப் பயன்படும் வாத்தியம்

1. தவில்
2. வயலின்
3. உடுக்கு
4. மத்தளம்

31 .சிங்கள மக்களின் இசை நாடகமாக அமைகின்ற ஆற்றுகை வடிவம்

1. நூர்த்தி 2.நாடகம 3.கொக்கரி 4.கோலம்

32. புதியதொரு வீடு நடகமானது

1. வரலாற்று நாடக வகை
2. சமய நாடக வகை
3. பா நாடக வகை
4. சிறுவர் நாடக வகை

33. மனோரதிய நாடகங்களின் காட்சியமைப்பு பெரும்பாலும்

1. சாதரண வாழ்வு நிலைப் பட்டதாகும்
2. குறியிட்டுத் தன்மை கொண்டதாகும்
3. அழகும் ஆடம்பரமும் நிறைந்ததாகும்
4. யதார்த்தமானதாகும்

34. மரபு வழி கூத்தில் சட்டம் கொடுத்தல் என்பது

1. ஏட்டுப்பிரதி வழங்குவதைக் குறிக்கும்
2. ஒப்பனைப் பொருள் வழங்குவதைக் குறிக்கும்
3. மேடையின் நடிபரப்பைக் குறிக்கும்
4. பாத்திரத் தெரிவைக் குறிக்கும்

35. நாடகத்தின் அடிப்படை மூலக்கூறுகள்

1. நடிகர் மேடை காட்சி
2. நடிகர் காட்சி ஒப்பனை
3. நடிகர் பார்ப்போர் ஆற்றுகைவெளி
4. நடிகர் கதைக்கரு பார்ப்போர்



kalvi.lk

36. படச்சட்ட அரங்கென்றில் அதிமுக்கியமான பகுதிகள் என அழைக்கப்படுவன

1. UR,UL
2. CR, CL
3. DC, DR
4. CL, UC

37. சக்தி பிறக்குது எனும் கூத்துரவ நாடகத்தின் ஆசிரியர்

1. சி.மௌனகுரு
2. குழந்தை ம.சண்முகலிங்கம்
3. இளைய பத்மநாதன்
4. கலைச் செல்வன்



***A***



***B***



***C***

A, B, C ஆகியவற்றால் குறிப்பிடப்பட்டுள்ள படங்களை ஆதாரமாகக் கொண்டு 38 தொடக்கம் 40 வரையிலான வினாக்களுக்கு விடையளிக்குக.

38. படம் A இனால் காட்டப்பட்டுள்ள சிங்கள நாடக மரபு குறிப்பது

1. தொவில்
2. கோலம்
3. சொக்கரி
4. ரட்டயக்கும

39. படம் B இனால் காட்டப்பட்டுள்ள காட்சி குறிக்கும் நாடகம்

1. இராவணேசன் கூத்து.
2. கோவலன் கூத்து
3. சிந்து நடைக் கூத்து
4. தென் மோடிக் கூத்து

40. படம் C இனால் காட்டப்பட்டுள்ள அரங்கவியளாளர்

1. போராசிரியர் சி.கணபதிப்பிள்ளை
2. போராசிரியர் சு.வித்தியானந்தன்
3. போராசிரியர் அருட்திரு மரியசேவியர் அடிகளார்
4. அருட்திரு அன்புராசா



kalvi.lk

## பகுதி II

**முதலாம் வினாவுக்கும் ஏனையவற்றுள் எவையேனும் நான்கு வினாக்களுக்குமாக மொத்தம் ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக**

(01) கீழ்வரும் வினாக்களுக்கு சுருக்கமான விடை எழுதுக

1.தமிழ்பாரம்பரிய மரபில் நாடகத்தைக் குறிக்கும் சொல் யாது?

2.புத்தாக்கம்(Improvisation) எனும் நடிப்பு நுட்பமுறையின் விளக்கம் யாது?

3.கூத்தரங்கம் என்ற சஞ்சிகையை வெளியிட்ட நிறுவனம் எது?

4.பறைமேளக்கூத்து பிரதானமாக ஆடப்படும் இடம் யாது?

5.சர்வதேச உலக நாடகதினம் எப்போது கொண்டாடப்படுகிறது? (திகதிமாதம்)

6. “பெத்தேகுரு” என்ற நாடகபாத்திரம் செய்யும் பணியாது?

7.நடிகமணிவி.வி.வைரமுத்து நிறுவிய நாடகசபையின் பெயர் என்ன?

8. “அரசனின்புத்தாடை” , ‘’சட்டியும்குட்டியும்’’ போன்ற சிறுவர் நாடகங்களை எழுதியவர் யார்?

9.கண்மணிக்குட்டியார், தப்பிவந்ததாடிஆடு,தேவலோகயானை, பிள்ளைஅழுதகண்ணீர் போன்ற நாடகங்களை எழுதியோர் யாவர்?

10. மேடை நாடகத்திற்கும் வானொலி நாடகத்திற்கும் இடையே காணப்படும் இரண்டு பிரதான வேறுபாடுகளை த்தருக

[1×8)+2+2=12 புள்ளிகள்]

(02) 1.நாடக எழுத்துரு ஒன்றில் காணப்படவேண்டிய அடிப்படை அம்சங்கள மூன்றினைக் குறிப்பிடுக (03 புள்ளிகள்)

2.கதை ஒன்றினை நாடகமாக்கும் போதுகையாளும் நுட்பமுறைகள் நான்கினைக் குறிப்பிடுக (04 புள்ளிகள்)

3.கொரோனா வைரஸ்தொற்று நோயிலிருந்து பாதுகாப்பு பெறுவதற்கான விழிப்புணர்வு நாடகமொன்றை எழுதுக (5 நிமிடத்திற்குரியது) (05 புள்ளிகள்)

(12 புள்ளிகள்)

(03) 1.மரபுவழிநாடகங்கள் ஆற்றுகை செய்யப்டும் பிரதேசங்களை பட்டியற்படுத்தி அங்கு ஆற்றுகை செய்யப்படும் நாடகங்களையும் குறிப்பிடுக (04 புள்ளிகள்)

2.கூத்துப்புத்தாக்கத்தின் போது மரபுவழி நாடகங்கள் எனக்கொள்ளப்படும் கூத்தின் இயல்புகளில் செய்யப்பட்ட மாற்றங்கள் நான்கினைக் குறிப்பிடுக (04 புள்ளிகள்)

3.கூத்துப்புத்தாக்க ஆளுமையினர் இருவரைக் குறிப்பிட்டு அவர்களால் செய்யப்பட்ட புத்தாக்க நாடகங்கள் இரண்டினையும் குறிப்பிடுக (04 புள்ளிகள்)

(4×3 = 12 புள்ளிகள்)



kalvi.lk

(04) 1.புதியதொருவீடு நாடக எழுத்துருவினூடாக வெளித்தெரியும் பின்வரும் விடயங்கள் தொடர்பாக விடையளிக்குக

1-நாடகத்தின்கரு (02 புள்ளிகள்)

2-நாடகத்தின்கதை (02 புள்ளிகள்)

3-பாத்திரங்களின்குணஇயல்புகள் (2×4 = 08 புள்ளிகள்)

அ)மையுண்டநெடும்கண்ணாத்தை

ஆ)மயிலி

இ)மாசிலன்

ஈ)மறைக்காடர்

(12 புள்ளிகள்)

(05) 1.காட்சி விதானிப்பு என்றால் என்ன? (02 புள்ளிகள்)

2.காட்சிவிதானிப்பின் போது கவனிக்கவேண்டிய விடயங்கள் நான்குதருக. (04புள்ளிகள்)

3.நாடகக்காட்சிவிதானிப்பின் பயன்பாடுகள் நான்கு தருக (04 புள்ளிகள்)

4.ஆரொடுநோகேன் நாடகத்தில் முதலாவது குடும்பத்திற்கு காட்சியமைப்பு செய்யும் போது பயன்படுத்தும் பொருட்களைக் குறிப்பிடுக (02 புள்ளிகள்)

(12 புள்ளிகள்)

(06) 1.நாடகத்தில் அசைவு என்றால் நீர் விளங்கிக்கொள்வது யாது? (03 புள்ளிகள்)

2.நாடகத்தில் அசைவின் பயன்பாடுகள் மூன்று தருக (03 புள்ளிகள்)

3.படைப்பாக்க அசைவுகளை வடிவாக்கம் செய்யும்போது கவனிக்கவேண்டிய விடயங்கள் மூன்று தருக (03 புள்ளிகள்)

4.உடல், உள்ளம் ஒத்திசைவு பெறுவதனால் ஏற்படும் நன்மைகள் மூன்று தருக (03 புள்ளிகள்)

Education கல்வி අධ්‍යාපන

(12புள்ளிகள்)

(07) 1.ஆற்றுகைக்கலை எனக்கருதப்படும் நாடகத்தின் பிரதான பண்புகள் ஆறைக்குறிப்பிடுக (03 புள்ளிகள்)

2.நாடகக்கலைவடிவம் எவ்வாறு சிற்பக்கலை, ஓவியக்கலை, இலக்கியம் போன்ற ஏனைய கலைகளிலிருந்து வேறுபடுகின்றது என்பதைக் குறிப்பிடுக (09புள்ளிகள்)

(12புள்ளிகள்)



kalvi.lk

Education கல்வி අධ්‍යාපන

**எங்கள் குறிக்கோள்**

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page